
ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்



பப்ளிஷர்ஸ் :

கிரி ப்ரஸ், திருவல்லிக்கேணி.

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்

(அஷ்டோத்தர சதநாமாவளியுடன்)

S. சங்கரநாராயணன், B.A. (Hons.)

கிரி ப்ரஸ், திருவல்லிக்கேணி.

 [Price As. 10/-

FIRST
EDITION
Feb. '48

Printed & Published
by K. Kylasamier
at GIRI PRESS,
Triplicane, Madras.

பதிப்புரை

ஸ்ரீமத் சங்கர பகவத்பாதர்கள் அருளிய "த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்" என்னும் இச்சிறு நூலை மிகுந்த சந்தோஷத்துடன் வெளியிடுகின்றேன்.

இதற்கு முன் என்னால் வெளியிடப்பட்டதும் ஆதிசங்கரர் அருளியதுமான 'ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ', 'ஸ்ரீ சுப்ரஹ்மண்ய புஜங்கம்', 'ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்', 'கனக தாரா ஸ்தோத்ரம்', 'ஆனந்தலஹரீ', 'ஶாரதாஷ்டகம்' முதலிய புஸ்தகங்களை விரும்பி ஏற்றுக்கொண்ட தமிழுலகம் இச்சிறு புஸ்தகத்தையும் ஆதரிக்கும் என்று நினைக்கின்றேன்.

சென்ற சில வருஷங்களாக, சத்விஷயங்கள் அடங்கிய மாதாந்திரப் புஸ்தகம் ஒன்று ப்ரசுரிக்க வேண்டுமென்ற அவா இருந்து வந்தது. காகிதக் கட்டுப்பாட்டினாலும், இவ்விஷயங்களில் ஆஸ்திகர்களின் ஆதரவு அதிகம் இல்லாதிருப்பதினாலும் மாத சஞ்சிகையாக ப்ரசுரிப்பது மிகவும் கடினமாகத் தோன்றிற்று.

நமது நாட்டு அரும்பெரும் பண்டைய நூல்களெல்லாம் அநேகமாக வடமொழியிலேயே உள்ளன. வடமொழி அறியாத

வரும் புரிந்துகொள்ளுமாறு, எளிய தமிழ் நடையில் இவைகளை மொழிபெயர்த்து அவைகளில் பொதிந்துள்ள ஆழ்ந்த கருத்துக்களையும், ரகசிய அத்யாத்ம போதனைகளையும் வெளிப்படுத்தி நம் தமிழரனைவரின் பொதுச் சொத்தாக அவைகளை ஆக்கவேண்டும் என்ற லக்ஷ்யத்துடன் பெரிய வித்வான்களைக் கொண்டு சிறு சிறு புஸ்தகங்களாக எழுதி, ப்ரசுரிக்கத் தீர்மானித்துள்ளேன். அன்பர்களது ஆதரவையும் தமிழ்க் கடவுள் முருகப்பெருமானது திருவருளையும் வேண்டுகின்றேன்.

இவ் விஷயத்தில் எனக்கு உற்சாகமளித்து இப் புஸ்தகத்தை அதி சீக்ரத்தில் எழுதிக்கொடுத்து உதவிய, ஸ்ரீமான் சங்கர நாராயணன் அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆசிரியரால் பிழையின்றி நன்கு பரிசோதிக்கப்பட்டு, 'ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ அஷ்டோத்தர சதநாமாவளி' கடைசியில் சேர்க்கப்பட்டுள்ளது. பாராயணத்திற்கும் பூஜையில் படிப்பதற்கும் ஆஸ்திகர்களுக்குப் பயன்படும்.

திருவல்லிக்கேணி,
2—2—48.

K. கைலாஸமய்யர்,
பதிப்பாளர்.

முன்னுரை

ஸ்ரீமத் சங்கராசார்யர் இயற்றிய ஸ்தோத்திரங்களில் இந்த த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்திரம் மிகவும் முக்கியத்துவம் பெற்றது. பதங்களினழகும் சொல் நடையும் ப்ராஸங்கள் ஒன்றையொன்று கட்டித் தழுவி வரும் இன்னொலியும் ஒருபுறமிருக்க, இந்த ஸ்தோத்திரத்தில் மந்த்ர சாஸ்திரங்களில் சொல்லப் பட்ட சகல விஷயங்களும் ரத்னச் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருப்பதே இதன் முக்கியத்துவத்திற்குக் காரணம். முதல் சுலோகமும் மூன்றும் சுலோகமும் த்ரிபுரஸுந்தரியைத் துதி செய்கின்றன. இரண்டாவது, நான்காவது சுலோகங்கள் அந்தர்யாக முறையைக் கூறுகின்றன. ஐந்தாவது மாதங்கியையும், ஆருவது காளியையும், ஏழாவது லலிதையையும், கடைசி சுலோகம் ராஜராஜேசுவரியையும், துதிசெய்கின்றன.

பெயரின் தத்துவம் :

த்ரிபுரஸுந்தரி என்று இந்த சுலோகங்களில் சொல்லப்பட்ட தேவதையைத்தான் லலிதா, காமேச்வரி, பராபட்டாரிகா, ராஜராஜேச்வரி என்று அழைக்கின்றூர்கள். த்ரிபுரஸுந்தரி என்ற பெயரைப்பற்றி காளிகாபுராணத்தில்

त्रिकोणं मण्डलं चास्या भूपुरं च त्रिरेखकम् ।
मन्त्रोऽपि त्र्यक्षरः प्रोक्तस्तथा रूपत्रयं पुनः ॥
त्रिविधा कुण्डलीशक्तिस्त्रिदेवानां च सृष्टये ।
सर्वं त्रयं त्रयं यस्मात्तस्मात्तु त्रिपुरा मता ॥

த்ரிகோணம் மண்டலம் சாஸ்யா பூபுரம் ச த்ரிரேககம் ।
மந்த்ரோபி த்ரயக்ஷர: ப்ரோக்தஸ்ததா ரூபத்ரயம் புந: ॥
த்ரிவிதா குண்டலீசக்திஸ்த்ரிதேவானாம் ச ஸ்ருஷ்டயே ।
ஸர்வம் த்ரயம் த்ரயம் யஸ்மாத்தஸ்மாத்து த்ரிபுரா மதா ॥

மந்த்ரம், யந்த்ரம், ரூபம் அனைத்தும் மூன்று அங்கங்களால் அதாவது புரங்களால் ஆனதால் அவளை த்ரிபுரா என்று அழைக்கின்றோம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸத், சித், ஆனந்தம் என்ற முப்புரங்களிலிருக்கும் த்ரிபுரஸுந்தரியே பிராணிகளிடம் கருணை கொண்டு அன்னம், பிராணன், மனஸ் என்ற முப்புரங்களில் குடிகொள்ள இசைகின்றாள். ஸச்சிதானந்தஸ்வரூபிணியை நம் த்ரிபுரங்களிலும் வந்து அருள்பாலிக்கச் செய்யவே நாம் த்ரிபுரஸுந்தரியை தியானிக்கின்றோம்.

தியானிக்கும் முறை :

அம்ருதஸமுத்திரத்தின் நடுவே கல்பக மரங்கள் சூழ்ந்த மணித்வீபத்தில் கதம்பச்சோலைகள் சுற்றிலுமுள்ள சிந்தாமணி கிருகத்தில், ப்ரும்மா விஷ்ணு ருத்ரன் ஈசானன் என்ற நால்வரும் கால்களாய், சதாசிவன் மேல்பலகையாய் இருக்கும் கட்டிலில், காமேச்வரன் மடியில் உட்கார்ந்து உணர்வு நிரம்பிய ஆனந்த வெள்ளமென இருக்கும் த்ரிபுரஸுந்தரியை தியானிக்க வேண்டும் என்று

सुधासिन्धोर्मध्ये सुरविटपिवाटीपरिवृते
मणिद्वीपे नीपोपवनवति चिन्तामणिगृहे ।
शिवाकारे मञ्चे परमशिवपर्यङ्कनिलयां
भजन्ति त्वां धन्याः कतिचन चिदानन्दलहरीम् ॥

ஸுதாஸிந்தோர்மத்யே ஸுரவிடபி வாடீபரிவ்ருதே
மணித்வீபே நீபோபவநவதி சிந்தாமணிக்ருஹே ।
சிவாகாரே மஞ்சே பரமசிவபர்யங்கநிலயாம்
பஜந்தி த்வாம் தந்யா: கதிசந சிதாநந்தலஹரீம் ॥

என்ற ஸௌந்தர்யலஹரீ ஸ்தோத்திரத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது. இது பாஹ்யமுறை. இவ்வாறு அம்பாளின் யந்த்ரமாகிற ஸ்ரீசக்ரத்தின் நடுவே பிந்து ஸ்தானத்தில் இருப்பவளாக தியானிக்கவேண்டும். அந்தர்முகர்கள் அதாவது தனக்குள்ளே நோக்கு பவர்கள் ஈச்வரியின் இருப்பிடம் சூக்ஷ்ம சரீரத் திலுள்ள ஸஹஸ்ரதளகமலம் என்று உணரவேண்டும். ஸஹஸ்ராரம்தான் ஸ்ரீசக்ரம் என்பார்கள். அனுஹதம் என்ற ஹ்ருதயகமலமே ஸ்ரீசகரம் என்பார் ஒரு சாரார். தேகமே ஸ்ரீசக்ரம், லோகமே ஸ்ரீசக்ரம் என் பாருமுளர். சாதகனது உள்வாழ்வு பண்படப் பண் பட அவனது அத்யாத்ம நோக்கு ஆழ்ந்து, விரிந்து கொண்டே செல்கின்றது. இந்த அதயாத்ம மலர்ச் சிக்கு மந்த்ரம் உபயோகப்படுகின்றது.

மந்த்ரங்கள் :

த்ரிபுரஸுந்தரியின் மந்த்ரங்கள் அனைத்தையும் மொத்தமாக ஸ்ரீவித்யை என்று கூறுவார்கள். மூன்று பீஜாக்ஷர ரூபிணியை பாலா என்றும், பதினைந்து கலை கள் கூடியபோது பஞ்சதசீ என்றும், மூன்றும் பதினைந் தும் சேர்ந்த ரூபத்தை ஸௌபாக்ய வித்யேச்வரீ என்றும் கூறுவார்கள். பதினாருவது கலையுடன் சேர்ந்தால் அவள் ஷோடசீ ஆவாள். ஸாதா என்ற தத்துவத்து டன் சேர்ந்து பரிபூர்ணமாக இருக்கும்போது மஹா ஷோடசீ எனப்படுவாள்.

மூர்த்திகள் :

அவள் ஸ்ரீவித்யா ஸ்வரூபிணியாதலால் அவளுக்கு வித்யையைக் கொடுக்கும் ஸரஸ்வதியின் அம்சம் பூர ணமாய் உண்டு. ஆதலால் சாதகன் த்ரிபுரஸுந்தரியை

ப்ரம்ம வித்யைக்காகத் துதிக்கும்போது அவளை மாதங்கியாகவும் சியாமளையாகவும் துதிக்கின்றான். ச்யாமா என்றால் கருமேனியாள். காளவர்ணம் (கருப்பு நிறம்) கொண்ட காளியும் ச்யாமளை ஆகிறாள். காளியும் வித்யையைக் கொடுப்பாள் என்று தந்த்ரங்கள் கூறும். அந்த ரூபத்தைத்தான் நீலநிறம் கொண்ட நாமகள், நீலஸரஸ்வதி என்று கூறுகின்றனர். தாரா என்ற மஹாவித்யையின் பேதங்களே நீலஸரஸ்வதி, ஏகஜடா என்று கூறுவர்.

कालिका द्विविधा प्रोक्ता कृष्णारक्ताप्रभेदतः ।
कृष्णा तु दक्षिणा प्रोक्ता रक्ता तु सुन्दरी मता ॥

காலிகா த்விவிதா ப்ரோக்தா க்ருஷ்ணாரக்தாப்ரபேதத: ।
க்ருஷ்ணா து தக்ஷிணா ப்ரோக்தா ரக்தா து ஸுந்தரீ மதா ॥

என்று தந்த்ரம் கூறும் வண்ணம் காளிகா கருப்பாக இருக்கும்போது தக்ஷிணகாளிகா என்றும் சிவப்பாக இருக்கும்போது த்ரிபுரஸுந்தரீ என்றும் கூறப்படுகின்றாள். இந்த உண்மையை வெளிப்படுத்தவே ஆசார்யர் இந்த த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்திரத்தில் மாதங்கியையும் காளியையும் துதித்துள்ளார்.

இந்த த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்திரம் பலருக்குத் தெரியும். இதன் உட்பொருளை அறிந்தால் அவர்களுக்கு மிகவும் பயன்படுமே என்று எழுதப்பட்டது.

सपर्यापर्यायस्तव भवतु यन्मे विलसितम् ।

ஸபர்யாபர்யாயஸ்தவ பவது யன்மே விலஸிதம் ।

ஸு. சங்கரநாராயணன்.



ஸ்ரீ மஹா த்ருபுரஸுந்தரி

त्रिपुरसुन्दरी स्तोत्रम्

த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்

कदंबवनचारिणीं मुनिकदंबकादंबिनीं
नितंबजितभूधरां सुरनितंबिनीसेविताम् ।
नवांबुरुहलोचनामभिनवांबुदश्यामलां
त्रिलोचनकुटुंबिनीं त्रिपुरसुन्दरीमाश्रये ॥ १ ॥

கதம்பவநசாரிணீம் முநிகதம்பகாதம்பிநீம்
நிதம்பஜிதபூதராம் ஸுரநிதம்பிநீஸேவிதாம் ।
நவாம்புருஹலோசநாமபிநவாம்புதச்யாமலாம்
த்ரிலோசநகுடும்பிநீம் த்ரிபுரஸுந்தரீமாச்ரயே ॥ 1 ॥

कदंबवनचारिणीं (கதம்பவநசாரிணீம்) கதம்பவிருக்ஷக்காடுகளில் சஞ்சரிப்பவளும் मुनिकदंबकादंबिनीं (முநிகதம்பகாதம்பிநீம்) முனிவர்கள் என்ற கதம்ப மரங்களுக்கு மேகக்கூட்டமாயிருப்பவளும் सुरनितंबिनीसेवितां (ஸுரநிதம்பிநீஸேவிதாம்) அமரவனிதையரால் சேவிக்கப்படுபவளும் नितंबजितभूधरां (நிதம்பஜிதபூதராம்) மலையைத் தோற்கடிக்கும் நிதம்பப்பிரதேசத்தை உடையவளும் नवांबुरुहलोचनां (நவாம்புருஹலோசநாம்) புதிய தாமரை போன்ற கண்களை உடையவளும் अभिनवांबुदश्यामलां

(அபிநவாம்புதச்யாமலாம்) புதிதாய் உதித்த நீருண்ட மேகம்போல் சியாம வர்ணமுடையவளுமான त्रिलोचन कुटुंबिनीं (த்ரிலோசநகுடும்பிநீம்) முக்கண்ணனின் மனைத் தலைவியாம் त्रिपुरसुन्दरीं (த்ரிபுரஸுந்தரீம்) த்ரிபுரஸுந்தரியை आश्रये (ஆச்ரயே) அடைக்கலம் புகின்றேன்.

கதம்பமரங்கள் ஆகாயத்தில் மேகக் கூட்டங்களைப் பார்த்தாலே போதும். மழை பெய்யப்போகின்றது என்ற மகிழ்ச்சியில் கொல்லென புஷ்பித்து விடுமாம். அவ்வாறே ஈச்வரி என்ற கருமேகக் கூட்டத்தை ஹ்ருதயம் என்னும் ஆகாசத்தில் சிறிது பார்த்தால் போதும். அன்னையின் அருள் மழையை நினைத்து முனிவர்களின் உள்ளங்கள் மலர்ச்சி அடைகின்றன. மழையைப் பொழிவதற்காகவே மேகங்கள் நீருண்டு கருத்து இருப்பதுபோல் கருணை வெள்ளத்தைப் பொழியவே த்ரிபுரஸுந்தரி கருநிறம் பூண்டு சியாமளையாய்த் திகழ்கின்றாள்.

கதம்பம் என்றால் மொத்தம், கூட்டம் என்று அர்த்த முண்டு. கதம்பவனம் என்பது சகல சராசராத்மகமான சிருஷ்டியைக் குறிக்கின்றது. கதம்பவனத்தில் தேவி சஞ்சரிக்கின்றாள் என்றால் அகில உலகிலும் உள்ளும் புறமும் சுற்றிலும் எங்கும் வியாபித்து நிற்கின்றாள் என்று தெரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறு விச்வரூபமான பரம்பொருளை நாம் ஸ்த்ரீரூபமாகக் கருதி அம்பாளாக உபாசிக்கும்போது மலை போன்ற நிதம்பத்தை உடையவள் என்று அவளை வர்ணிப்பது அசம்பாவித மாகாது.

'முனிகதம்பகாதம்பினீ' என்று இங்கு சொல்லி யிருப்பதுபோல் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் भक्तचित्त-केकिघनाघना (பக்தசித்தகேகிகநாகநா) பக்தர்களின் உள்ளங்கள் என்னும் மயில்களுக்குக் கார்மேகமாய்த் திகழ்பவள் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

कदंबवनवासिनीं कनकवल्लकीधारिणीं
महार्हमणिहारिणीं मुखसमुल्लसद्वारुणीम् ।
दयाविभवकारिणीं विशदलोचनीं चारिणीं
त्रिलोचनकुटुंबिनीं त्रिपुरसुन्दरीमाश्रये ॥ २ ॥

கதம்பவநவாஸிநீம் கநகவல்லகீதாரிணீம்
மஹார்ஹமணிஹாரிணீம் முகஸமுல்லஸத்வாருணீம் ।
தயாவிபவகாரிணீம் விசதலோசநீம் சாரிணீம்
த்ரிலோசநகுடும்பிநீம் த்ரிபுரஸுந்தரீமாச்ரயே ॥ 2 ॥

कदंबवनवासिनीं (கதம்பவநவாஸிநீம்) கதம்பக்காடுகளில் வசிப்பவளும் कनकवल्लकीधारिणीं (கநகவல்லகீதாரிணீம்) தங்க வீணையைத் தரித்திருப்பவளும் महार्हमणिहारिणीं (மஹார்ஹமணிஹாரிணீம்) விலையுயர்ந்த ரத்ன மாலைகளை அணிந்திருப்பவளும் मुखसमुल्लसद्वारुणीं (முகஸமுல்லஸத்வாருணீம்) முகத்தில் மணங்கமழும் வாருணீ என்ற மதுவை உடையவளும் विशदलोचनीं (விசதலோசநீம்) தெளிந்த கண்களை உடையவளும் दयाविभवकारिणीं (தயாவிபவகாரிணீம்) தனது கருணையால் சம்பத்தை அளிப்பவளும் चारिणीं (சாரிணீம்) (சைதன்யரூபியானதால்)

எப்போதும் சிரித்துக்கொண்டிருப்பவளுமான त्रिलोचन-कुटुम्बिनीं (த்ரிலோசநகுடும்பிநீம்) முக்கண்ணனின் மனைத் தலைவியாம் त्रिपुरसुन्दरीं (த்ரிபுரஸுந்தரீம்) த்ரிபுரஸுந்தரியை आश्रये (ஆச்ரயே) அடைக்கலம் புகின்றேன்.

ஈச்வரன் உலகத்தை ஒரு காமனையால் ஒரு இச்சையால் சிருஷ்டி செய்தான். அதைத்தான் सोऽकामयत बहुस्यां प्रजायेयेति (ஸோகாமயத, பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி) என்று ச்ருதி கூறும். சிருஷ்டியின் ரகஸ்யமான இக்காமனையே காமம், அன்பு, ப்ரியம், வாத்சல்யம், ப்ரேமை, காதல் என்று பற்பல உருவங்கள் எடுத்து பிராணிகளிடையே உலவி வருகின்றது. மானிடரிடையே இருக்கும் காதல் அன்பு எல்லாம் அந்த தெய்வக்காதலின் சாயலே என்று கூறுவர். ஆகையால் சிருஷ்டிக்குக் காரணமான புருஷனையும் ப்ரக்ருதியையும் காமேச்வரன் காமேச்வரி என்று அழைக்கின்றனர். இந்த காமேச்வரிதான் மஹா த்ரிபுரஸுந்தரி என்றும் ச்ருங்கார ரஸமே உருவெடுத்து வந்ததுபோன்ற மூர்த்தி என்றும் தந்த்ர சாஸ்திரங்கள் கூறுகின்றன. ச்ருங்காரலஹரீ, ச்ருங்கார பரிபூர்ணு என்று தேவிக்குப் பல பெயர்களுண்டு. ஆதலால் தேவியை வாருணீ என்ற மதுவைக் குடித்துக் களிகொண்டவளாயும் அழகிய மணிமாலைகள் அணிந்தவளாயும் சிரித்த முகத்தினளாயும் வீணை, வேணு முதலிய வாத்தியங்கள் வாசிப்பதில் ப்ரியமுடையவளாயும் பக்தன் தியானிக்க வேண்டும். वारुणीमदविह्वला (வாருணீமதவிஹ்வலா) என்று லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ஒரு நாமம் உண்டு.

பூஜையில் இரண்டுவித முண்டு. பாஹ்ய பூஜை, அதாவது வெளிப்படையாகச் செய்வது. மற்றொன்று ஆந்தர பூஜை. அதாவது தனக்குள் செய்து கொள்வது.

कंजभवाण्डे मण्डलिनी प्राणिशरीरे कुण्डलिनी ।
पामरभावे सल्ललना पण्डितभावे मोदघना ॥

கஞ்சபவாண்டே மண்டலிநீ ப்ராணிசரீரே குண்டலிநீ ।
பாமரபாவே ஸல்லலநா பண்டிதபாவே மோதகநா ॥

என்று வாசிஷ்ட கணபதிமுனிவர் உமாஸஹஸ்ரத்தில் கூறியபடி எவள் பிரும்மாண்டத்தில் சூரியன் சந்திரன் முதலிய கிரகங்களை ஆட்டிவைக்கின்றளோ, அவளே பிராணிகளின் உடலில் குண்டலினி சக்தியாய் இருக்கின்றள். பாமரர்கள் கண்களுக்கு ஸ்திரீபோல் புலப்படும் அவள் அறிவாளிகளுக்கு அடர்ந்த ஆனந்த ஸ்வரூபம். ஆகையால் ஈச்வரியை ச்ருங்காரம் ததும்பும் உத்தமஸ்திரீயாக பாவிப்பது என்பது பாஹ்ய பூஜை. ஆனல் அறிவாளிகளுக்கு உள்தத்துவம் ஒன்று உளது என்று தெரியும். இந்த சுலோகத்தில் ஆந்தர பூஜைக்கான ரகசியம் இருக்கின்றது.

சாதாரணமாக மது என்றல் தேன் அல்லது சாராயம் என்றுதான் அர்த்தம் செய்துகொள்கின்ருேம். ஆனல் மது என்றல் ஆனந்தம் என்று பொருள். मधु द्यौरस्तु नः पिता (மது த்யௌரஸ்து நः பிதா) முதலிய ச்ருதி வசனங்களே பிரமாணம். பின்னுளில் ஆனந்தத்தைக் கொடுக்கும் வஸ்துக்களுக்

கெல்லாம் மது என்று பெயர் ஏற்பட்டது. அதனுல் அம்பாள் மதுவைக் குடித்து களி புரிகிருள் என்ருல் அவள் ஆனந்த ஸ்வரூபி என்றுதான் பொருள். தவிர वारुणी (வாருணீ) என்பது உபநிடத வித்யை ஒன்றைக் குறிப்பது.

सैषा भार्गवी वारुणी विद्या । परमे व्योमन् प्रतिष्ठिता

ஸைஷா பார்கவீ வாருணீ வித்யா । பரமே வ்யோமந் ப்ரதிஷ்டிதா

என்று இதைப்பற்றி விரிவாக தைத்திரீயோபனிஷத் ப்ருகுவல்லியில் சொல்லி யிருக்கின்றது. ஆனந்த ரூபிணி ஈச்வரி என்பதைத்தான் मुखसमुल्लसद्वारुणी (முக ஸமுல்லஸத்வாருணீ) என்று கூறப்பட்டது. தவிர பிராணிகளின் முதுகெலும்புக்கு வீணுதண்டம் என்று பெயர். அதில்தான் ஸுஷும்னே என்ற பிரதான நாடி ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த ஸுஷும்ன மார்க்கத்தில்தான் குண்டலினி சக்தி சஞ்சாரம் செய்கின்ருள். அவள்தான் அதற்கு ஆதாரமாய் இருக்கின்ருள். ஆகையால் वल्लकी धारिणीं (வல்லகீ தாரிணீம்) என்பது ஆதார சக்தியைக் குறிக்கின்றது. चारिणी (சாரிணீ) என்ற இன்னெரு அடைமொழி இந்தப் பொருளை நன்கு விளக்குகின்றது. எப்போதும் சஞ்சரித்துக் கொண்டிருப்பவள் சாரிணீ. குண்டலினீ சக்தி மின்னல் கொடிபோல் சஞ்சலப்போக்கு உடையவள். ஆகையால் சாரிணீ என்று குண்டலினீ சக்தியைச் சொல்லுகிருேம். இக்குண்டலினீ சக்தி விழிப்புற்று மேலே போவதற்கு ஹடயோகம் முதலிய

யோகங்களின் பயிற்சி வேண்டும். ஆனால் அம்பாளின் அருள் இருந்தால் அது தானே சித்திக்கும். ஆகையால் 'தயா விபவகாரிணி' அவளது தயையால் ஐச்வர்யம், ஈச்வரத் தன்மையைக் கொடுப்பவள், சக்தி விலாஸத்தை ஏற்படுத்துபவள்.

ஆகையால் அந்தர்முகமாக உபாசிக்கும் சாதகன் அம்பாள்தான் ஸூக்ஷ்ம சரீரத்திலுள்ள ஆறு ஆதாரங்களையும் தரிக்கின்றாள் என்று தெரிந்துகொண்டு அவளை ஆனந்த ரூபியாக தியானித்து அவளது அருளால் ஆதாரங்களில் எல்லாம் சக்தி விலாஸம் ஏற்படவேண்டும் என்று பிரார்த்திக்கவேண்டும்.

कदंबवनशालया कुचभरोल्लसन्मालया
कुचोपमितशैलया गुरुकृपालसद्वेलया ।
मदारुणकपोलया मधुरगीतवाचालया
कयापि घननीलया कवचिता वयं लीलया ॥ ३ ॥

கதம்பவநசாலயா குசபரோல்லஸந்மாலயா
குசோபமிதசைலயா குருக்ருபாலஸத்வேலயா ।
மதாருணகபோலயா மதுரகீதவாசாலயா
கயாபி கநநீலயா கவசிதா வயம் லீலயா ॥ 3 ॥

कदंबवनशालया (கதம்பவனசாலயா) கதம்பவனத்தை இருப்பிடமாக உடையவளும் कुचभरोल्लसन्मालया (குசபரோல்லஸன்மாலயா) ஸ்தனபாரத்தின் மீது பிரகாசிக்கும் மாலையை உடையவளும் कुचोपमितशैलया (குசோப

மிதசைலயா) மலையுடன் உவமிக்கத்தக்க கொங்கைகள் பெற்றவளும் मदारुणकपोलया (மதாருணகபோலயா) மதுபானத்தால் (மகிழ்ச்சியால்) சிவந்த கன்னங்கள் பெற்றவளும் मधुरगीतवाचालया (மதுரகீதவாசாலயா) இனிமையாக கானம் செய்வதில் சாமர்த்தியசாலியும் गुरुकृपालसद्वेलया (குருக்ருபாலஸத்வேலயா) பரம (குருவின்) கிருபையால் பிரகாசிக்கும் வெள்ளம் போன்றவளுமான घननीलया (கனநீலயா) மேகம்போல் கருத்த कयापि (கயாபி) யாரோ (விவரிக்கவொண்ணுத) ஒருவளால் वयं (வயம்) நாம் लीलया (லீலயா) விளையாட்டாகவே कवचिता: (கவசிதா:) கவசமிட்டது போல் போர்த்து காப்பாற்றப்பட்டோம்.

நாம் அனைவரும் அன்னையின் புதல்வர்கள். நம் முயற்சியன்றியே நம்மை எதிரிகளிடமிருந்து காப்பாற்ற கவசம்போல் நாற்றிசையிலும் நம்மைச் சூழ்ந்து காத்து வருகின்ருள். அவள் யார் என்றே விவரித்துச் சொல்ல முடியவில்லை. வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாது என ச்ருதியும் கூறி அயர்ந்து போயிற்று. அவளை எப்படி நாம் வர்ணிக்க முடியும்? அவளது அருட்பிரவாகத்தையும் ரக்ஷணசக்தியையும் தான் அனுபவிக்க முடியும்.

குருவின் அனுக்ரகம் சாதனைக்கு ஜீவநாடி. ஆகையால் குருவின் கருணைவெள்ளமே ஈச்வரி என்று கூறியிருக்கின்றது.

கடினத்திலும் உருவத்திலும் ஒத்திருப்பதால் முலையை மலையுடன் உவமை கூறினர். ப்ரமாணம்,

அதாவது அளவிலும் ஒற்றுமை உண்டோ என சந்தேகம் எழக்கூடாது. இது பூரண உவமை அல்ல.

அடுத்த ச்லோகத்தில் அந்தர்யாகத்தைப் பற்றிச் சொல்லப்படுகின்றது.

कदंबवनमध्यगां कनकमण्डलोपस्थितां
षडंबुरुहवासिनीं सततसिद्धसौदामिनीम् ।
विडंबितजपारुचिं विकचचन्द्रचूडामणिं
त्रिलोचनकुटुंबिनीं त्रिपुरसुन्दरीमाश्रये ॥ ४ ॥

கதம்பவநமத்யகாம் கநகமண்டலோபஸ்திதாம்
ஷடம்புருஹவாஸிநீம் ஸததஸித்தஸௌதாமிநீம் ।
விடம்பிதஜபாருசிம் விகசசந்த்ரசூடாமணிம்
த்ரிலோசந குடும்பிநீம் த்ரிபுரஸுந்தரீமாச்ரயே ॥ 4 ॥

कदंबवनमध्यगां (கதம்பவனமத்யகாம்) கதம்பவனத்தின் நடுவில் இருப்பவளும் **कनकमण्डलोपस्थितां** (கனகமண்டலோபஸ்திதாம்) தங்கமண்டலத்தில் அதாவது மேருவில் அமர்ந்திருப்பவளும் **षडंबुरुहवासिनीं** (ஷடம்புருஹவாஸிநீம்) மூலாதாரம் முதலிய ஆறு கமலங்களில் வசிப்பவளும் **सततसिद्धसौदामिनीं** (ஸததஸித்தஸௌதாமிநீம்) நித்யசித்தர்களுக்கு மின்னல் கொடிபோல் ஸ்புரிப்பவளும் **विकचचन्द्रचूडामणिं** (விகசசந்த்ரசூடாமணிம்) நிர்மல மதியைத் தலையிலணிந்தவளும் **विडंबितजपारुचिं** (விடம்பிதஜபாருசிம்) செம்பருத்திமலரைப் பழிக்கும் காந்தியுடையவளுமான **त्रिलोचनकुटुंबिनीं**

(த்ரிலோசனகுடும்பினீம்) முக்கண்ணனின் மனைத்தலைவியாம் त्रिपुरसुन्दरीं (த்ரிபுரஸுந்தரீம்) த்ரிபுரஸுந்தரியை आश्रये (ஆச்ரயே) அடைக்கலம் புகின்றேன்.

சரீரத்தில் வீணாதண்டம் என்ற முதுகெலும்பில் ஸுஷும்ணா என்ற நாடி இருப்பதாகவும் அதன் அடிப்பாகத்திலிருந்து மேல்வரை ஆறுசக்ரங்கள் இருப்பதாகவும் சொல்லப்படும். இவைகளெல்லாம் சூக்ஷ்ம சரீரத்திலேதான் இருக்கின்றன. ஆகையால் மனித சரீரத்தை வெட்டிப் பார்த்தால் இவை இருப்பது தெரியாது. இந்த ஆறு சக்ரங்களை முறையே மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞா என்று கூறுவர். இந்த சக்ரங்களைக் கமலங்கள் என்றும் சங்கேதமாகச் சொல்லுவார்கள். இந்த சக்ரங்களைப் பற்றி மிக விரிவாக அறியவேண்டுமானால் ஸ்ரீ பூர்ணானந்தஸ்வாமியின் 'ஷட் சக்ர நிரூபணம்' என்ற க்ரந்தத்தைப் பார்க்கலாம். இதற்கு ஆசார்ய சங்கரர் ஓர் பாஷ்யம் இயற்றி யிருக்கின்றார்கள். ஸௌந்தர்யலஹரியிலும் महीं मूलाधारे (மஹீம் மூலாதாரே) முதலிய ச்லோகங்களில் நன்கு கூறியிருக்கின்றார்கள். இந்த ஆறு சக்ரங்களுக்கு மேலும் பிரும்ம ரந்த்ரத்திற்குக் கீழும் ஸஹஸ்ரதள கமலம் இருக்கின்றது.

எல்லாவற்றிற்கும் கீழே இருக்கும் மூலாதாரத்தில் ஈச்வரி மறைந்து இருக்கின்றாள். அவள் குண்டலினீ என்ற சர்ப்ப ரூபமாக தன்னை மூன்றரை சுற்றுகளாகச் செய்துகொண்டு அங்கே தூங்கிக்கொண்

டிருக்கிருள் என்பர். தத்துவம் என்னவெனில் ஜடர்கள் கண்களுக்கு அவள் பாம்புபோல் பயங்கரமாயும் தூங்கிக்கொண்டே தாமஸகுணம் நிறைந்தவளாயும் தோன்றுவாள். யோகிகள் கண்களுக்கு விழிப்புற்று சகலத்தையும் ஆட்டிவைக்கும் சக்தியாக மாறுவாள். சாதகன் உடலில் இந்த குண்டலினீ மெதுவாக விழிப்புற்று மூலாதாரத்திலிருந்து ஒவ்வொரு கமலமாக மேல் சென்று அங்கங்கே தங்கி பிறகு ஸஹஸ்ரதள கமலத்தில் தனது நாயகனுன காமேச்வரனுடன் சேர்ந்து பரம ஆனந்தத்தையும் அம்ருதரஸப்ரவாகத்தையும் சாதகனுக்கு ஏற்படுத்துகின்ருள். இந்த ஸஹஸ்ராரத்தில் சிவ சக்தி ஸாமரஸ்யம் ஏற்படுவதால் இதை கனக மண்டலம் என்றே கூறியுள்ளார்கள். இங்குதான் சரீரத்தில் சந்திரனுடைய ஸ்தானமிருக்கின்றது. அதனுல்தான் அம்ருதரஸப்ரவாகம் ஏற்படுகின்றது.

இந்தக் குண்டலினி சக்தியை மின்னல்கொடி என்னும் தாமரைத்தண்டுபோல் மெல்லியது என்றும் கூறியுள்ளனர். विद्युल्लेखेव भास्वरा...अणूपमा । तस्याः शिखायाः मध्ये परमात्मा व्यवस्थितः (வித்யுல்லேகேவ பாஸ்வரா... அணூபமா। தஸ்யா: சிகாயா: மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:) என்று ச்ருதியும்

तटिल्लतासमरुचिः षट्चक्रोपरि संस्थिता ।
महासक्तिः कुण्डलिनी बिसतन्तुतनीयसी ॥

தடில்லதாஸமருசி: ஷட்சக்ரோபரி ஸம்ஸ்திதா ।
மஹாஸக்தி: குண்டலிநீ பிஸதந்து தனீயஸீ ॥

என்று லலிதா ஸஹஸ்ரநாமமும் கூறும். तटिल्लेखातन्वीं (தடில்லேகாதந்வீம்) என்ற ஸௌந்தர்யலஹரி ச்லோகத்தையும் காண்க. ஆகையால் 'ஸததஸித்த ஸௌதாமினீம்' என்று குண்டலினி சக்திதான் குறிக்கப்படுகின்றது.

கனகமண்டலம் என்ருல் மேரு என்றும் ஸஹஸ்ராரம் என்றும் கூறினேம். ஏனெனில் சாதகனுக்கு இவை இரண்டும் ஒன்றுதான். கடவுள் நாமரூப மற்றவராதலால் நாம் அவரை நினைத்து வழிபட ஒரு மூர்த்தியோ, பாவனையோ, மந்திரமோ, யந்த்ரமோ வேண்டி இருக்கின்றது. ஒரு தேவதையை உபாசிக்கும்போது அந்த தேவதை, சாதகன், தேவதையின் மந்த்ரம், யந்த்ரம், தத்வம் எல்லாம் ஒன்றே என்ற தாதாத்ம்யம் அதாவது ஐக்யானுஸந்தானம் ஏற்படுவது தான் சாதனையின் பரம ரகசியம். ஈச்வரியின் யந்த்ரம்தான் ஸ்ரீசக்ரம். ஸ்ரீசக்ரத்தையே பூப்ரஸ்தாரம், கைலாஸப்ரஸ்தாரம், மேருப்ரஸ்தாரம் என்று மூன்ருகச் சொல்லுவார்கள். இந்த மேருவைத் தான் புராணங்களில் ஸ்வர்ணமலை என்றும் இதை சூர்ய சந்திரர்கள் வலம் வருகின்றனர் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. தேவதையையும் அதன் யந்த்ரத்தையும் அபின்னமாக பாவிக்கவேண்டு மாதலால் ஸ்ரீசக்ரத்தில் தேவி வாசம் செய்கின்ருள். மேருவே தேவி என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த மேரு எங்கோ வெளியில் இருக்கின்றது என்று எண்ணவேண்டாம். ஸஹஸ்ராரம் தான் மேரு, ஸ்ரீசக்ரம். இங்குதான் குண்டலினீ சக்தி என்ற

காமேச்வரி காமேச்வரன் என்ற பரசிவத்துடன் சேர்கின்ருள்.

ஆகையால் இந்த ச்லோகத்தில் மஹாத்ரிபுர ஸுந்தரியின் உள்தத்துவமும் அந்தர்யாகம் என்ற தனக்குள்ளே செய்யும் பூஜைக்கு வேண்டிய விஷயமும் கூறப்பட்டிருக்கின்றது.

பின்வரும் ச்லோகங்கள் தேவியின் மூர்த்தி விசேஷங்களைச் சொல்கின்றன. அந்தந்த செயலுக்கு ஏற்ருல் போல் அந்தந்த மூர்த்திகள் இருக்கின்றன. மஹாத்ரிபுரஸுந்தரியை சாதகர்களின் மனப்போக்குக்கும் உள்ளக்கிளர்ச்சிக்கும் பரிபக்குவத்திற்கும் ஏற்றவாறு இப்படி மூர்த்திகளாக தியானிக்கலாம்.

कुचाञ्चितविपञ्चिकां कुटिलकुन्तलालङ्कृतां
कुशेशयनिवासिनीं कुटिलचित्तविद्वेषिणीम् ।
मदारुणविलोचनां मनसिजारिसंमोहिनीं
मतङ्गमुनिकन्यकां मधुरभाषिणीमाश्रये ॥ ५ ॥

குசாஞ்சிதவிபஞ்சிகாம் குடிலகுந்தலாலங்க்ருதாம்
குசேசயநிவாஸினீம் குடிலசித்தவித்வேஷிணீம் ।
மதாருணவிலோசநாம் மநஸிஜாரிஸம்மோஹினீம்
மதங்கமுநிகந்யகாம் மதுரபாஷிணீமாச்ரயே ॥ 5 ॥

कुचाञ्चितविपञ्चिकां (குசாஞ்சிதவிபஞ்சிகாம்) ஸ்தனத்தில் அழுத்திய வீணையை உடையவளும் कुटिलकुन्तलालङ्कृतां (குடிலகுந்தலாலங்க்ருதாம்) வளைந்த சுருட்டைக் கூந்

தலால் அலங்கரிக்கப்பட்டவளும் कुशेशयनिवासिनीं (குசேசயநிவாஸினீம்) (ஹ்ருதய) கமலத்தில் வாசம் செய்பவளும் कुटिलचित्तविद्वेषिणीं (குடிலசித்தவித்வேஷிணீம்) கெடுமதி கொண்டோரைத் துலைப்பவளும் मदारुणविलोचनां (மதாருணவிலோசனாம்) களிப்பால் சிவந்த கண்களை உடையவளும் मनसिजारिसंमोहिनीं (மனஸிஜாரிஸம்மோஹினீம்) மன்மதனை எரித்த மகாதேவனையும் மயக்குபவளுமான मधुरभाषिणीं (மதுரபாஷிணீம்) இனிமை ததும்பப் பேசும मतङ्गमुनिकन्यकां (மதங்கமுனிகன்யகாம்) மதங்கமுனிவரின் மகளை आश्रये (ஆச்ரயே) அடைக்கலம் புகின்றேன்.

ஈச்வரி மதங்க முனிவரின் மகளாக அவதரித்தாள் என்று கூறுவர். இந்த ரூபத்தை மாதங்கி, ராஜமாதங்கி, ராஜச்யாமளை, சங்கீதச்யாமளை, மரகதாங்கி என்றும் பலவாறு கூறுவார்கள். இந்திர நீலக்கல்போல் உடலொளி வீச பாணிகளில் யாழேந்தி அனைவரையும் மயக்கி நிற்பாள் மாதங்கி. இவளைப்பற்றியே சியாமளாதண்டகம் புகழ்கின்றது.

माणिक्यवीणामुपलालयन्तीं मदालसां मञ्जुलवाग्विलासाम् ।
माहेन्द्रनीलद्युतिकोमलाङ्गीं मातङ्गकन्यां मनसा स्मरामि ॥

மாணிக்யவீணாமுபலாலயந்தீம் மதாலஸாம் மஞ்சுலவாக்விலாஸாம் ।
மாஹேந்த்ரநீலத்யுதிகோமலாங்கீம் மாதங்ககன்யாம் மனஸா ஸ்மராமி ॥

என்ற ச்லோகமே அவளது ரூபத்தை போதிக்கின்றது.

சியாமளா த்ரிபுரஸுந்தரியிலிருந்து வேறுபட்டவள் அல்ல. இவளை உபாஸித்தால் சங்கீத சாஸ்திரமும் வித்யையும் எளிதில் வரும் என்று பெரியோர் கூறுவர். இவள் தசமஹாவித்யைகளில் ஒருவள்.

அடுத்த ச்லோகத்தில் மஹாகாளியின் ரூபம் தியானிக்கப்படுகின்றது.

स्मरेत्प्रथमपुष्पिणीं रुधिरबिन्दुनीलांबरां
गृहीतमधुपात्रिकां मधुविघूर्णनेत्रांचलाम् ।
घनस्तनभरोन्नतां गलितचूलिकां श्यामलां
त्रिलोचनकुटुंबिनीं त्रिपुरसुन्दरीमाश्रये ॥ ६ ॥

ஸ்மரேத்ப்ரதமபுஷ்பிணீம் ருதிரபிந்துநீலாம்பராம்
க்ருஹீதமதுபாத்ரிகாம் மதுவிகூர்ணநேத்ராஞ்சலாம் ।
கனஸ்தனபரோந்நதாம் கலிதசூலிகாம் ச்யாமலாம்
த்ரிலோசனகுடும்பினீம் த்ரிபுரஸுந்தரீமாச்ரயே ॥ 6 ॥

घनस्तनभरोन्नतां (கனஸ்தனபரோந்நதாம்) கெட்டியாய் நிமிர்ந்து இருக்கும் கொங்கைகளுடைய श्यामलां (ச்யாமலாம்) கருமேனியாளை प्रथमपुष्पिणीं (ப்ரதமபுஷ்பிணீம்) முதன் முதலாக ருதுவானவளாகவும் रुधिरबिन्दुनीलांबरां (ருதிரபிந்துநீலாம்பராம்) ரத்தத்துளிகள் நிறைந்த கருப்பு வஸ்திரத்தை உடையவளாயும் गृहीतमधुपात्रिकां (க்ருஹீதமதுபாத்ரிகாம்) கள்பாத்திரத்தைக் கையிலேந்தியவளாயும் मधुविघूर्णनेत्रांचलां (மதுவிகூர்ணநேத்ராஞ்சலாம்) மதுபானத்தால் சுழலும் கண்களை

உடையவளாயும் गलितचूलिकां (கலிதசூலிகாம்) தலைமுடி அவிழ்ந்தவளாயும் स्मरेत् (ஸ்மரேத்) தியானிக்க வேண்டும். (அந்த) त्रिलोचनकुटुंबिनीं (த்ரிலோசந குடும்பினீம்) முக்கண்ணனின் மனையாட்டியாம் त्रिपुर सुन्दरीं (த்ரிபுரஸுந்தரீம்) த்ரிபுரஸுந்தரியை आश्रये (ஆச்ரயே) அடைக்கலம் புகின்றேன்.

காளம் என்றாலும் ச்யாம என்றாலும் கருப்பு வர்ணத்தைக் குறிப்பது. ஆதலால் ச்யாமளா என்று காளியைச் சொல்லுவார்கள். அவளைத் தலைமுடி அவிழ்ந்த முக்தகேசி யாகவும் கள்குடியால் கண் சுழல, கள்பாத்திரத்தைக் கையிலேந்தி ரத்தக் கறைகள் ஆடையில் தோன்ற நிற்கும் முதல்ருதுவான ஸ்திரீயாகவும் நினைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. சாதகர்களில் பசு பாவத்தில் இருப்பவர்கள் இவ்வாறு நினைத்துக் கொள்வார்கள். திவ்ய பாவத்திலிருக்கும் சாதகர்களுக்கு இதன் உட்பொருள் விளங்கும்.

मधु (மது) என்பது ஆனந்தத்தைக் குறிக்கின்றது என்று முன்பே சொன்னோம். 'ப்ரதமபுஷ்பம்' ஸ்திரீ கர்ப்பமடையத் தகுதியானவள் என்பதையே குறிக்கின்றது. ஈச்வரியை ப்ரதமபுஷ்பிணீ என்றால் சிருஷ்டி செய்யும் சக்தியுடன் இருப்பவளாக தியானம் செய்து கொள்ளவேண்டும் என்று பொருள். தவிர காளியை அந்தர்முகமான பூஜையில் ஹ்ருதயத்தில் நினைக்க வேண்டும் என்பார்கள். ஹ்ருதயம் தான் அனுஹதம் என்ற கமலம். दहराम्बुरुहे भद्रा कालि (தஹராம்புருஹே பத்ரா காளீ) என்று கணபதி முனிவர் உமாஸஹஸ்ரத்தில்

சொல்லியிருப்பதைக் காண்க. ருதிரத்தில் அவள் இருக்கின்றாள் என்று

अनाहताब्जनिलया श्यामाभा वदनद्वया ।
दंष्ट्रोज्ज्वलाक्षमालादिधरा रुधिरसंस्थिता ॥

அனாஹதாப்ஜநிலயா ச்யாமாபா வதனத்வயா ।
தம்ஷ்ட்ரோஜ்ஜ்வலாக்ஷமாலாதிதரா ருதிரஸம்ஸ்திதா ॥

என்ற லலிதா ஸஹஸ்ரநாமப் பெயர்களிலிருந்து தெரிகின்றது. ஆகையால் புஷ்பம் என்பது ஆதாரகமலத்தைக் குறிக்கின்றது. ப்ரதம புஷ்பம் என்பது முக்கிய ஆதாரசக்ரமான ஹ்ருதயமென்னும் அனாஹதத்தைக் குறிக்கின்றது. प्रथमपुष्पिणी (ப்ரதமபுஷ்பிணீ) அனாஹதத்திலிருக்கும் மஹாகாளி. அவள் रुधिरसंस्थिता (ருதிர ஸம்ஸ்திதா) என்று ஸஹஸ்ரநாமத்தில் சொல்லப்பட்டிருப்பதால் रुधिरबिन्दुनीलांबरा (ருதிரபிந்துநீலாம்பரா) என்று வர்ணிக்கப்பட்டிருக்கின்றாள்.

ஆகையால் த்ரிபுரஸுந்தரியைக் காளியாக பாவித்து அவளை ஹ்ருதயத்தில் பூஜை செய்யும் முறை இந்த ச்லோகத்தில் கூறப்பட்டது.

அடுத்ததாக லலிதை துதிக்கப்படுகின்றாள்.

सकुंकुमविलेपनामलकचुंबिकस्तूरिकां
समन्दहसितेक्षणां सशरचापपाशाङ्कुशाम् ।
अशेषजनमोहिनीमरुणमाल्यभूषांबरां
जपाकुसुमभासुरां जपविधौ स्मराम्यम्बिकाम् ॥ ७ ॥

ஸகுங்குமவிலேபநாம் அலககும்பிகஸ்தூரிகாம்
ஸமந்தஹஸிதேக்ஷணாம் ஸசரசாபபாசாங்குசாம் ।
அசேஷஜனமோஹினீம் அருணமால்யபூஷாம்பராம்
ஜபாகுஸுமபாஸுராம் ஜபவிதௌ ஸ்மராம்யம்பிகாம் ॥ 7 ॥

सकुंकुमविलेपनां (ஸகுங்குமவிலேபநாம்) குங்குமப்பூச்சுட னிருப்பவளாயும் अलकचुंबिकस्तूरिकां (அலககும்பிகஸ்தூரி காம்) முன்நெற்றி மயிர்கள் முத்தமிடும் கஸ்தூரிப் பொட்டை தரித்தவளாயும் समन्दहसितेक्षणां (ஸமந்த ஹஸிதேக்ஷணாம்) புன்முறுவல் கண்களில் தோன்றும் படி இருப்பவளாயும் सशरचापपाशाङ्कुशां (ஸசரசாப பாசாங்குசாம்) அம்பு, வில், பாசம், அங்குசம் இவை களைக் கைகளில் ஏந்தியவளாயும் अशेषजनमोहिनीं (அசேஷ ஜனமோஹினீம்) அகிலபிராணிகளையும் மயக்குபவளா யும் अरुणमाल्यभूषांबरां (அருணமால்யபூஷாம்பராம்) சிவந்த மாலை, ஆபரணம், வஸ்த்ரம் இவைகளைத் தரித் தவளாயும் जपाकुसुमभासुरां (ஜபாகுஸுமபாஸுராம்) செம்பருத்திமலரின் ஒளி பெற்றவளாயும் जपविधौ (ஜப விதௌ) ஜபம் செய்யும்போது अम्बिकां (அம்பிகாம்) அம்பிகையை स्मरामि (ஸ்மராமி) தியானிக்கிறேன்.

லலிதைதான் காமேச்வரி என்றும் அவளை ச்ருங் காரமே உருவெடுத்து வந்ததுபோல் தியானிக்கவேண் டும் என்றும் கூறினோம். ச்ருங்காரத்தை சிவப்பு நிற மாக வர்ணிப்பது கவிகளின் மரபு. ஆதலால் லலி தையை சிவந்த ஆடையாபரணங்கள், மலர்கள், சிவப்பு குங்குமம் இவைகளை அணிந்தவளாயும் செம் பருத்தி நிற மேனியை உடையவளாயும் பாவிக்க வேண்டும்.

அவள் மஹாமாயா ஸ்வரூபிணியானதால் சகல புவனங்களேயும் தன் செளந்தரியத்தால் மயக்கி விடுகிருள். அவளது புன்முறுவல் அதரத்தில்மட்டும் வெளிப் படுவதில்லே; கண்களிலும் தோன்றுகிறது. அவள் அளகபாரத்தை வாரி முடிந்திருந்தாலும் முன்நெற்றியில் சில சுருட்டைமயிர்கள் புரளுகின்றன. அவள் நெற்றியில் அழகாக இட்டிருக்கும் கஸ்தூரிப் பொட்டை முத்தமிடுவதற்காகவே இந்த சுருட்டைகள் முயற்சிக்கின்றன போலும்!

பக்தர்களேக் காப்பதற்காக கைளில் ஐந்து பாணங்கள், ஒரு கரும்பு வில், பாசம், அங்குசம் இவைகளே தரித்திருக்கின்ருள். காமம் என்பதே அவளது பாசம். க்ரோதம் அவளது அங்குசம். மனம் என்னும் வில்லில் சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற ஐந்து தன்மாத்திரைகளே பாணமாகப் பூட்டியிருக்கின்ருள்.

पाशाङ्कुशौ तदीयौ तु रागद्वेषात्मकौ स्मृतौ ।
शब्दस्पर्शादयो बाणाः मनस्तस्या अभूत् धनुः ॥

பாசாங்குசௌ ததீயௌ து ராகத்வேஷாத்மகௌ ஸ்ம்ருதௌ ।
சப்தஸ்பர்சாதயோ பாணா: மநஸ்தஸ்யா அபூத் தநு: ॥

என்று வாமகேச்வரதந்த்ரத்திலும்

रागस्वरूपपाशाढ्या क्रोधाकाराङ्कुशोज्ज्वला ।
मनोरूपेक्षुकोदण्डा पञ्चतन्मात्रसायका ॥

ராகஸ்வரூபபாசாட்யா க்ரோதாகாராங்குசோஜ்வலா ।
மனோரூபேக்ஷுகோதண்டா பஞ்சதந்மாத்ரஸாயகா ॥

என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்திலும் சொல்லியிருப்பதைக் காண்க. இன்னும் ஆழ்ந்து நோக்கின், தேவதையின் ஆயுதங்கள் எல்லாம் அந்த தேவதையின் மந்த்ரத்தின் பீஜாக்ஷரங்களே என்று விளங்கும்.

இந்த ச்லோகத்தை ஸ்ரீவித்யோபாஸகர்கள் தியான ச்லோகமாகவே உபயோகப்படுத்தி வருகின்றார்கள்.

கடைசியாக ராஜராஜேச்வரிக்கு வணக்கம் செலுத்தப்படுகின்றது.

पुरन्दरपुरन्ध्रिकां चिकुरबन्धसैरन्ध्रिकां
पितामहपतिव्रतां पटुपटीरचर्चारताम् ।
मुकुन्दरमणीं मणीलसदलङ्क्रियाकारिणीं
भजामि भुवनाम्बिकां सुरवधूटिकाचेटिकाम् ॥ ८ ॥

புரந்தரபுரந்த்ரிகாம் சிகுரபந்தஸைரந்த்ரிகாம்
பிதாமஹபதிவ்ரதாம் படுபடீரசர்சாரதாம் ।
முகுந்தரமணீம் மணீலஸதலங்க்ரியாகாரிணீம்
பஜாமி புவநாம்பிகாம் ஸுரவதூடிகாசேடிகாம் ॥ 8 ॥

पुरन्दरपुरन्ध्रिकां (புரந்தரபுரந்த்ரிகாம்) இந்திரனின் இல்லாளை चिकुरबन्धसैरन्ध्रिकां (சிகுரபந்தஸைரந்த்ரிகாம்) கூந்தலை முடியும் வேலைக்காரியாகவும் पितामहपतिव्रतां (பிதாமஹபதிவ்ரதாம்) பிரும்மதேவனின் பத்தினியை पटुपटीरचर्चारतां (படுபடீரசர்சாரதாம்) திவ்ய சந்தனத்

தைப் பூசுபவளாகவும் सुकुन्दरमणीं (முகுந்தரமணீம்) மாதவன் மனைவியை मणीलसदलङ्क्रियाकारिणीं (மணீலஸதலங்க்ரியாகாரிணீம்) மணிகளிழைத்த நகைகளை அணிவிப்பவளாகவும் सुरवधूटिकाचेटिकां (ஸுரவதூடிகாசேடிகாம்) தேவமங்கையரை பணிப்பெண்களாகவும் உடைய भुवनाम्बिकां (புவனும்பிகாம்) உலகத்தாயை भजामि (பஜாமி) தொழுகின்றேன்.

ஈச்வரி உலகத்தின் தாயானதால் அனைவரும், தேவர்களும் உள்பட, அவளது குழந்தைகள். ஆதலால் அவளுக்கு சுச்ரூஷை செய்யவேண்டியவர்களாகிறுர்கள். ராஜராஜேச்வரியாக அம்பாள் இருப்பதால் அனைவரும், தேவர்களுங்கூட அவளுக்குப் பணி செய்ய வேண்டும். இந்திராணி அவளது கூந்தலைக் கட்டுகின்ருள், ஸரஸ்வதி அவளுக்குச் சந்தனம் பூசுகின்ருள், லக்ஷ்மி அவளுக்கு நகைகள் பூட்டுகின்ருள், அமர அணங்குகள் பணிப்பெண்களாகின்றனர்.

ஈச்வரியை உபாசித்தால் மற்ற தேவதைகளின் அருள் தானே கிடைக்கின்றது. இந்திராணி அளிக்கும் சக்தியும் ஸரஸ்வதி கொடுக்கும் வித்யையும் லக்ஷ்மியின் சம்பத்தும் தேவஸ்திரீகளின் ஸௌபாக்யங்களும் சாதகனை தானே வந்தடைகின்றன என்பதைத் தான் இந்த ச்லோகம் போதிக்கின்றது.

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीमच्छङ्कराचार्य
विरचितं त्रिपुरसुन्दरीस्तोत्रं समाप्तम् ।

இதி ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமச்சங்கராசார்ய
விரசிதம் த்ரிபுரஸுந்தரீஸ்தோத்ரம் ஸமாப்தம் ।

இவ்வாறு ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான
ஸ்ரீமத்சங்கராசார்யர் இயற்றிய த்ரிபுரஸுந்தரீ
ஸ்தோத்ரம் முடிந்தது.

श्रीत्रिपुरसुन्दरी अष्टोत्तरशतनामावली

ध्यानम् ।

बालार्कमण्डलाभासां चतुर्बाहुं त्रिलोचनाम् ।
पाशाङ्कुशशरं चापं धारयन्तीं शिवां भजे ॥

ஸ்ரீத்ரிபுரஸுந்தரீ அஷ்டோத்தரசதநாமாவளி

த்யானம் ।

பாலார்க்கமண்டலாபாஸாம் சதுர்பாஹும் த்ரிலோசநாம் ।
பாசாங்குசசரம் சாபம் தாரயந்தீம் சிவாம் பஜே ॥

ओं रजताचलश्रृङ्गाग्रमध्यस्थायै नमो नमः ।
हिमाचलमहावंशपावनायै नमो नमः ।
शङ्करार्द्धाङ्गसौन्दर्यशरीरायै नमो नमः ।
लसन्मरकतस्वच्छविग्रहायै नमो नमः ।
महातिशयसौन्दर्यलावण्यायै नमो नमः ।
शशाङ्कशेखरप्राणवल्लभायै नमो नमः ।
सदा पञ्चदशात्मैक्यस्वरूपायै नमो नमः।
वज्रमाणिक्यकटककिरीटायै नमो नमः ।
कस्तूरीतिलकोद्भासिनिटिलायै नमो नमः ।
भस्मरेखाङ्कितलसन्मस्तकायै नमो नमः ।
विकचाम्भोरुहदललोचनायै नमो नमः ।
शरच्चाम्पेयपुष्पाभनासिकायै नमो नमः ।
लसत्काञ्चनताटङ्कयुगलायै नमो नमः ।
मणिदर्पणसङ्काशकपोलायै नमो नमः ।
तांबूलपूरितस्मेरवदनायै नमो नमः ।
सुपक्वदाडिमीबीजरदनायै नमो नमः ।
कम्बुपूगसमच्छायकन्धरायै नमो नमः ।
स्थूलमुक्ताफलोदारसुहारायै नमो नमः ।
गिरीशबद्धमाङ्गल्यमङ्गलायै नमो नमः ।
पद्मपाशाङ्कुशलसत्कराब्जायै नमो नमः । २०
पद्मकैरवमन्दारसुमालिन्यै नमो नमः ।

ஓம் ரஜதாசலஶ்ருங்காக்ரமத்யஸ்தாயை நமோ நம: ।
ஹிமாசலமஹாவம்ஶபாவனாயை நமோ நம: ।
ஶங்கரார்தாங்கஸௌந்தர்யஶரீராயை நமோ நம: ।
லஸன்மரகதஸ்வச்சவிக்ரஹாயை நமோ நம: ।
மஹாதிஶயஸௌந்தர்யலாவண்யாயை நமோ நம: ।
ஶஶாங்கஶேகரப்ராணவல்லபாயை நமோ நம: ।
ஸதா பஞ்சதஶாத்மைக்யஸ்வரூபாயை நமோ நம: ।
வஜ்ரமாணிக்யகடககிரீடாயை நமோ நம: ।
கஸ்தூரீதிலகோத்பாஸிநிடிலாயை நமோ நம: ।
பஸ்மரேகாங்கிதலஸன்மஸ்தகாயை நமோ நம: ।
விகசாம்போருஹதலலோசனாயை நமோ நம: ।
ஶரச்சாம்பேயபுஷ்பாபநாஸிகாயை நமோ நம: ।
லஸத்காஞ்சநதாடங்கயுகலாயை நமோ நம: ।
மணிதர்ப்பணஸங்காஶகபோலாயை நமோ நம: ।
தாம்பூலபூரிதஸ்மேரவதனாயை நமோ நம: ।
ஸுபக்வதாடிமீபீஜரதனாயை நமோ நம: ।
கம்புபூகஸமச்சாயகந்தராயை நமோ நம: ।
ஸ்தூலமுக்தாபலோதாரஸுஹாராயை நமோ நம: ।
கிரீஶபத்தமாங்கல்யமங்கலாயை நமோ நம: ।
பத்மபாஶாங்குஶலஸத்கராப்ஜாயை நமோ நம: । 20
பத்மகைரவமந்தாரஸுமாலிந்யை நமோ நம: ।

ओं सुवर्णकुम्भयुग्माभसुकुचायै नमो नमः ।

रमणीयचतुर्बाहुसंयुक्तायै नमो नमः ।

कनकाङ्गदकेयूरभूषितायै नमो नमः ।

बृहत्सौवर्णसौन्दर्यवसनायै नमो नमः ।

बृहन्नितंबविलसद्रसनायै नमो नमः ।

सौभाग्यजातशृंगारमध्यमायै नमो नमः ।

दिव्यभूषणसन्दोहरञ्जितायै नमो नमः ।

पारिजातगुणाधिक्यपदाब्जायै नमो नमः ।

सुपद्मरागसङ्काशचरणायै नमो नमः ।

कामकोटिमहापद्मपीठस्थायै नमो नमः ।

श्रीकण्ठनेत्रकुमुदचन्द्रिकायै नमो नमः ।

सचामररमावाणीवीजितायै नमो नमः ।

भक्तरक्षणदाक्षिण्यकटाक्षायै नमो नमः ।

भूतेशालिङ्गनोद्भूतपुलकाङ्ग्यै नमो नमः ।

अनङ्गजनकापाङ्गवीक्षणायै नमो नमः ।

ब्रह्मोपेन्द्रशिरोरत्नरञ्जितायै नमो नमः ।

शचीमुख्यामरवधूसेवितायै नमो नमः ।

लीलाकल्पितब्रह्माण्डमण्डलायै नमो नमः ।

अमृतादिमहाशक्तिसंवृतायै नमो नमः । ४०

एकातपत्रसाम्राज्यदायिकायै नमो नमः ।

सनकादिसमाराध्यपादुकायै नमो नमः ।

ஓம் ஸுவர்ணகும்பயுக்மாபஸுகுசாயை நமோ நம: ।
ரமணீயசதுர்பாஹுஸம்யுக்தாயை நமோ நம: ।
கநகாங்கதகேயூரபூஷிதாயை நமோ நம: ।
ப்ருஹத்ஸௌவர்ணஸௌந்தர்யவஸநாயை
நமோ நம: ।
ப்ருஹந்நிதம்பவிலஸத்ரஸநாயை நமோ நம: ।
ஸௌபாக்யஜாதஶ்ருங்காரமத்யமாயை நமோ
நம: ।
திவ்யபூஷணஸந்தோஹரஞ்ஜிதாயை நமோ
நம: ।
பாரிஜாதகுணாதிக்யபதாப்ஜாயை நமோ நம: ।
ஸுபத்மராகஸங்காஶசரணாயை நமோ நம: ।
காமகோடிமஹாபத்மபீடஸ்தாயை நமோ நம: ।
ஸ்ரீகண்டநேத்ரகுமுதசந்த்ரிகாயை நமோ நம: ।
ஸசாமரரமாவாணீவீஜிதாயை நமோ நம: ।
பக்தரக்ஷணதாக்ஷிண்யகடாக்ஷாயை நமோ நம: ।
பூதேஶாலிங்கநோத்பூதபுலகாங்க்யை நமோ
நம: ।
அநங்கஜனகாபாங்கவீக்ஷணாயை நமோ நம: ।
ப்ரம்ஹோபேந்த்ரஶிரோரத்னரஞ்ஜிதாயை
நமோ நம: ।
ஶசீமுக்யாமரவதூஸேவிதாயை நமோ நம: ।
லீலாகல்பிதப்ரம்ஹாண்டமண்டலாயை நமோ
நம: ।
அம்ருதாதிமஹாஶக்திஸம்வ்ருதாயை நமோ
நம: । 40
ஏகாதபத்ரஸாம்ராஜ்யதாயிகாயை நமோ நம: ।
ஸனகாதிஸமாராத்யபாதுகாயை நமோ நம: ।

ओं देवर्षिभिः स्तूयमानवैभवायै नमो नमः ।
कलशोद्भवदुर्वासपूजितायै नमो नमः ।
मत्तेभवक्त्रषड्वक्त्रवत्सलायै नमो नमः ।
चक्रराजमहायन्त्रमध्यवर्त्यै नमो नमः ।
चिदग्निकुण्डसंभूतसुदेहायै नमो नमः ।
शशाङ्कखण्डसंयुक्तमुकुटायै नमो नमः ।
मत्तहंसवधूमन्दगमनायै नमो नमः ।
वन्दारुजनसन्दोहवन्दितायै नमो नमः ।
अन्तर्मुखजनानन्दफलदायै नमो नमः ।
पतिव्रताङ्गनाभीष्टफलदायै नमो नमः ।
अव्याजकरुणापूरपूरितायै नमो नमः ।
नितान्तसच्चिदानन्दसंयुक्तायै नमो नमः ।
सहस्रसूर्यसंयुक्तप्रकाशायै नमो नमः ।
रत्नचिन्तामणिगृहमध्यस्थायै नमो नमः ।
हानिवृद्धिगुणाधिक्यरहितायै नमो नमः ।
महापद्माटवीमध्यनिवासायै नमो नमः ।
जाग्रत्स्वप्नसुषुप्तीनां साक्षिभूत्यै नमो नमः ।
महातापौघपापानां विनाशिन्यै नमो नमः । ६०
दुष्टभीतिमहाभीतिभञ्जनायै नमो नमः ।
समस्तदेवदनुजप्रेरकायै नमो नमः ।
समस्तहृदयांभोजनिलयायै नमो नमः ।

ஓம் தேவர்ஷிபி: ஸ்தூயமானவைபவாயை நமோ நம: ।
கலஶோத்பவதுர்வாஸபூஜிதாயை நமோ நம: ।
மத்தேபவக்த்ரஷட்வக்த்ரவத்ஸலாயை நமோ நம: ।
சக்ரராஜமஹாயந்த்ரமத்யவர்த்யை நமோ நம: ।
சிதக்நிகுண்டஸம்பூதஸுதேஹாயை நமோ நம: ।
ஶஶாங்ககண்டஸம்யுக்தமுகுடாயை நமோ நம: ।
மத்தஹம்ஸவதூமந்தகமநாயை நமோ நம: ।
வந்தாருஜநஸந்தோஹவந்திதாயை நமோ நம: ।
அந்தர்முகஜநாநந்தபலதாயை நமோ நம: ।
பதிவ்ரதாங்கநாபீஷ்டபலதாயை நமோ நம: ।
அவ்யாஜகருணாபூரபூரிதாயை நமோ நம: ।
நிதாந்தஸச்சிதாநந்தஸம்யுக்தாயை நமோ நம: ।
ஸஹஸ்ரஸூர்யஸம்யுக்தப்ரகாஶாயை நமோநம: ।
ரத்னசிந்தாமணிக்ருஹமத்யஸ்தாயை நமோ நம: ।
ஹாநிவ்ருத்திகுணாதிக்யரஹிதாயை நமோ நம: ।
மஹாபத்மாடவீமத்யநிவாஸாயை நமோ நம: ।
ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்தீநாம்ஸாக்ஷிபூத்யை நமோ நம:
மஹாதாபௌகபாபாநாம்விநாஶிந்யை நமோ நம: । 60
துஷ்டபீதிமஹாபீதிபஞ்ஜநாயை நமோ நம: ।
ஸமஸ்ததேவதநுஜப்ரேரகாயை நமோ நம: ।
ஸமஸ்தஹ்ருதயாம்போஜநிலயாயை நமோ நம: ।

ओं अनाहतमहापद्ममन्दिरायै नमो नमः ।
सहस्रारसरोजातवासितायै नमो नमः ।
पुनरावृत्तिरहितपुरस्थायै नमो नमः ।
वाणीगायत्रीसावित्रीसन्नुतायै नमो नमः ।
रमाभूमिसुताराध्यपदाब्जायै नमो नमः ।
लोपामुद्रार्चितश्रीमच्चरणायै नमो नमः ।
सहस्ररतिसौन्दर्यशरीरायै नमो नमः ।
भावनामात्रसन्तुष्टहृदयायै नमो नमः ।
सत्यसंपूर्णविज्ञानसिद्धिदायै नमो नमः ।
त्रिलोचनकृतोल्लासफलदायै नमो नमः ।
श्रीसुधाब्धिमणिद्वीपमध्यगायै नमो नमः ।
दक्षाध्वरविनिर्भेदसाधनायै नमो नमः ।
श्रीनाथसोदरीभूतशोभितायै नमो नमः ।
चन्द्रशेखरभक्तार्तिभञ्जनायै नमो नमः ।
सर्वोपाधिविनिर्मुक्तचैतन्यायै नमो नमः ।
नामपारायणाभीष्टफलदायै नमो नगः ।
सृष्टिस्थितितिरोधानसङ्कल्पायै नमो नमः । ८०
श्रीषोडशाक्षरीमन्त्रमध्यगायै नमो नमः ।
अनाद्यन्तस्वयंभूतदिव्यमूर्त्यै नमो नमः ।
भक्तहंसवतीमुख्यनियोगायै नमो नमः ।
मातृमण्डलसंयुक्तललितायै नमो नमः ।
भण्डदैत्यमहासत्त्वनाशनायै नमो नमः ।
क्रूरभण्डशिरच्छेदनिपुणायै नमो नमः ।

ஓம் அநாஹதமஹாபத்மமந்திராயை நமோ நம: ।
ஸஹஸ்ராரஸரோஜாதவாஸிதாயை நமோ நம: ।
புனராவ்ருத்திரஹிதபுரஸ்தாயை நமோ நம: ।
வாணீகாயத்ரீஸாவித்ரீஸந்நுதாயை நமோ நம: ।
ரமாபூமிஸுதாராத்யபதாப்ஜாயை நமோ நம: ।
லோபாமுத்ரார்ச்சிதஸ்ரீமச்சரணாயை நமோ நம:
ஸஹஸ்ரரதிஸௌந்தர்யஶரீராயை நமோ நம: ।
பாவநாமாத்ரஸந்துஷ்டஹ்ருதயாயை நமோ நம: ।
ஸத்யஸம்பூர்ணவிக்ஞாநஸித்திதாயை நமோ நம: ।
த்ரிலோசனக்ருதோல்லாஸபலதாயை நமோ நம: ।
ஸ்ரீஸுதாப்திமணித்வீபமத்யகாயை நமோ நம: ।
தக்ஷாத்வரவிநிர்பேதஸாதநாயை நமோ நம: ।
ஸ்ரீநாதஸோதரீபூதஶோபிதாயை நமோ நம: ।
சந்த்ரஶேகரபக்தார்த்திபஞ்ஜநாயை நமோ நம:
ஸர்வோபாதிவிநிர்முக்தசைதந்யாயை நமோ நம: ।
நாமபாராயணாபீஷ்டபலதாயை நமோ நம: ।
ஸ்ருஷ்டிஸ்திதிதிரோதானஸங்கல்பாயை நமோ நம: । 80
ஸ்ரீஷோடஶாக்ஷரீமந்த்ரமத்யகாயை நமோ நம:
அநாத்யந்தஸ்வயம்பூதிவ்யமூர்த்யை நமோ நம: ।
பக்தஹம்ஸவதீமுக்யநியோகாயை நமோ நம: ।
மாத்ருமண்டலஸம்யுக்தலலிதாயை நமோ நம: ।
பண்டதைத்யமஹாஸத்வநாஶநாயை நமோ நம: ।
க்ரூரபண்டஶிரச்சேதநிபுணாயை நமோ நம: ।

ओं धात्रच्युतसुराधीशसुखदायै नमो नमः ।
चण्डमुण्डनिशुंभादिखण्डनायै नमो नमः ।
रक्ताक्षरक्तजिह्वादिशिक्षणायै नमो नमः ।
महिषासुरदोर्वीर्यनिग्रहायै नमो नमः ।
अभ्रकेशमहोत्साहकारणायै नमो नमः ।
महेशयुक्तनटनतत्परायै नमो नमः ।
निजभर्तृमुखांभोजचिन्तनायै नमो नमः ।
वृषभध्वजविज्ञानभावनायै नमो नमः ।
जन्ममृत्युजरारोगभञ्जनायै नमो नमः ।
विदेहमुक्तिविज्ञानसिद्धिदायै नमो नमः ।
कामक्रोधादिषड्वर्गनाशनायै नमो नमः ।
राजराजार्चितपदसरोजायै नमो नमः ।
सर्ववेदान्तसिद्धान्तसुतत्त्वायै नमो नमः ।
श्रीवीरभक्तविज्ञाननिदानायै नमो नमः । १००
अशेषदुष्टदनुजसूदनायै नमो नमः ।
साक्षाच्छ्रीदक्षिणामूर्तिमनोज्ञायै नमो नमः ।
महामेधाग्रसंपूज्यमहिमायै नमो नमः ।
दक्षप्रजापतिसुतावेषाढ्यायै नमो नमः ।
सुमबाणेक्षुकोदण्डमण्डितायै नमो नमः ।
नित्ययौवनमाङ्गल्यमङ्गलायै नमो नमः ।
महादेवसमायुक्तमहादेव्यै नमो नमः ।
चतुर्विंशतितत्त्वैकस्वरूपायै नमो नमः ।

ஓம் தாத்ரச்யுதஸுராதிஶஸுகதாயை நமோ நம: ।
சண்டமுண்டநிஶும்பாதிகண்டநாயை நமோ நம: ।
ரக்தாக்ஷரக்தஜிஹ்வாதிஶிக்ஷணாயை நமோ நம: ।
மஹிஷாஸுரதோர்வீர்யநிக்ரஹாயை நமோ நம: ।
அப்ரகேஶமஹோத்ஸாஹகாரணாயை நமோ நம: ।
மஹேஶயுக்தநடநதத்பராயை நமோ நம: ।
நிஜபர்த்ருமுகாம்போஜசிந்தநாயை நமோ நம: ।
வ்ருஷபத்வஜவிக்ஞானபாவநாயை நமோ நம: ।
ஜந்மம்ருத்யுஜராரோகபஞ்ஜநாயை நமோ நம: ।
விதேஹமுக்திவிக்ஞாநஸித்திதாயை நமோ நம: ।
காமக்ரோதாதிஷட்வர்கநாஶநாயை நமோ நம: ।
ராஜராஜார்ச்சிதபதஸரோஜாயை நமோ நம: ।
ஸர்வவேதாந்தஸித்தாந்தஸுதத்வாயை நமோ நம: ।
ஶ்ரீவீரபக்தவிக்ஞாநநிதாநாயை நமோ நம: । 100
அஶேஷதுஷ்டதநுஜஸூதநாயை நமோ நம: ।
ஸாக்ஷாத்ஶ்ரீதக்ஷிணாமூர்த்திமநோக்ஞாயை நமோ நம: ।
மஹாமேதாக்ரஸம்பூஜ்யமஹிமாயை நமோ நம: ।
தக்ஷப்ரஜாபதிஸுதாவேஷாட்யாயை நமோ நம: ।
ஸுமபாணேக்ஷுகோதண்டமண்டிதாயை நமோ நம: ।
நித்யயௌவனமாங்கல்யமங்கலாயை நமோ நம: ।
மஹாதேவஸமாயுக்தமஹாதேவ்யை நமோ நம: ।
சதுர்விம்ஶதிதத்வைகஸ்வரூபாயை நமோ நம: ।

GIRI PRESS
TRIPLICANE
Q.H. M/S 173
1000—30-1-48

விரைவில் வெளிவரும்:

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

தேவி சது: ஷஷ்ட்யுபசாரபூஜா ஸ்தோத்ரம்

தமிழ் ஸம்ஸ்கிருதம் லிபிகளில் ச்லோகங்களும், ஸ்ரீமான் **V. நாராயணன்,** M.A., M.L. அவர்களால் ப்ரதிபத அர்த்தத்துடனும் விரிவான தாத்பர்யத்துடனும் எழுதப்பட்டுள்ளது.

மஹிஷ மர்தினீ ஸ்தவம்

(தேவீ மாஹாத்ம்யம் என்ற மந்த்ர சாஸ்த்ரத்தில்
நான்காம் அத்யாயம்)

தமிழ் ஸம்ஸ்க்ருதம் லிபிகளில் ச்லோகங்களும் ஸ்ரீமான் **S. சங்கரநாராயணன்** B.A. (Hons.) அவர்களால் ப்ரதிபத அர்த்தத்துடனும் விரிவான தாத்பர்யம் தத்துவார்த்தத்துடனும் எழுதப்பட்டுள்ளது.

கிரி ப்ரஸ், பப்ளிஷர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை.